தமிழ்நாடு சட்டப் பேரவை

திருவள்ளுவர் ஆண்டு 2041 – சித்திரை 22

2010 மே 5, புதன்கிழமை

சென்னை, ஓமந்தூரார் அரசினர் தோட்டம், புதிய சட்டப் பேரவை–தலைமைச் செயலக வளாகத்தில் உள்ள சட்டப் பேரவை மண்டபத்தில் மாண்புமிகு பேரவைத் தலைவர் **திரு. இரா. ஆவுடையப்பன்** அவர்கள் தலைமையில் காலை 9–30 மணியளவில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்:

"சூழாமல் தானே முடிவெய்தும் தங்குடியைத்
தாழா துஞற்று பவர்க்கு"

தம்மைச் சார்ந்த குடிகளை உயர்த்தும் செயல்களில் காலம் தாழ்த்தாமல் ஈடுபட்டு முயலுகிறவர்களுக்குத் தாமாகவே வெற்றிகள் வந்து குவிந்துவிடும்.

[குறிப்பு : ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

1. தகவல் கோரல்

(அ) கோவை, ஈரோடு மாவட்ட திராவிட பஞ்சாலைத் தொழிலாளர் சங்கக் கட்டடத்திற்குள் சென்ற ம.தி.மு.க.–வினர் கைது

திரு. சி. ஞானசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. . . (குறுக்கீடுகள்)

திரு. கே.ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. . . (குறுக்கீடுகள்)

திரு. செ.ம. வேலுசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. . . (குறுக்கீடுகள்)*

திரு. வை. சிவபுண்ணியம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. . . *(குறுக்கீடுகள்)*

செல்வி கே. பாலபாரதி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. . . (குறுக்கீடுகள்)*

டாக்டர் தி. சதன் திருமலைக்குமார்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. . . (குறுக்கீடுகள்)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பஞ்சாலை சம்பந்தமாக பதில் சொல்ல சம்பந்தப்பட்ட அமைச்சர் யாரும் அவையில் இல்லை. *(குறுக்கீடுகள்)*

திரு. கே.ஏ. செங்கோட்டையன்: இங்கு பதில் சொல்ல அமைச்சர்கள் யாரும் இல்லை என்று சொன்னீர்கள். அப்படியென்றால் zero hour முடிந்த பிறகு, அமைச்சருடைய பதிலுரைக்குப் பின்பு எடுக்க வாய்ப்பிருக்கிறதா? இதனை நீங்கள் consider செய்யலாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வேறு matter-க்குப் போய்விட்டால் எடுக்க முடியாது.

திரு. கே.ஏ. செங்கோட்டையன்: வேறு matter-க்குப் போய்விட்டால் எடுக்க முடியாது என்று சொன்னால் எப்படி? நாங்கள் mention பண்ணிவிடுகிறோம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் mention பண்ணுங்கள். *(குறுக்கீடுகள்)* Mention பண்ண வேண்டுமென்றால் mention பண்ணுங்கள். இப்போது நான் என்னுடைய முடிவைச் சொல்லிவிடுகிறேன். நீங்கள் நேற்றைக்கு அறிவிப்பு கொடுத்திருக்கிறீர்கள். அதுகுறித்து என்னுடைய முடிவை நான் சொல்லிவிடுகிறேன்.

கோவையில் உள்ள கோவை, ஈரோடு மாவட்ட திராவிட பஞ்சாலைத் தொழிலாளர் சங்கக் கட்டடத்திற்குள் சென்ற ம.தி.மு.க.–வினர் கைது செய்யப்பட்டுள்ளது குறித்து மாண்புமிகு அ.இ.அ.தி.மு.க. துணைத் தலைவர் மற்றும் திரு. கே.ஏ. செங்கோட்டையன் மற்றும் உறுப்பினர்கள், அதேபோல்

இந்திய மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சி, இந்திய கம்யூனிஸ்டு கட்சி மற்றும் ம.தி.மு.க. உறுப்பினர்கள் ஒத்திவைப்புத் தீர்மான அறிவிப்பு கொடுத்துள்ளார்கள். அதோடு நான் நேற்றைய தினம் கோரியவாறு, அ.இ.அ.தி.மு.க. உறுப்பினர் திரு. செ.ம. வேலுசாமி அவர்கள் நீதிமன்ற இடைக்கால ஆணையின் நகல் ஒன்றையும் எனக்கு அளித்துள்ளார். பேரவை விதி 56 மற்றும் 65 (xi)—ன்படி நீதிமன்றத்தின் ஆய்வில் உள்ள எப்பொருள் பற்றியும் ஒத்திவைப்புத் தீர்மானம் இருத்தல் கூடாது எனத் தெளிவாகக் குறிப்பிடப்பெற்றுள்ளது. அதேபோல், பேரவை விதி 92 (i)—ன்படி, நீதி விசாரணையில் உள்ள எப்பொருள் மீதும் தம் கருத்தினைச் சொல்லவோ, அப்பொருள் பற்றிக் குறிப்பிடவோ கூடாதெனத் தெளிவாக உள்ளது. எனவே, இப்பொருள் இன்னும் நீதிமன்ற அதிகார வரம்பிற்குள் உள்ளதால் இப்பொருள்பற்றிப் பேரவையில் விவாதிக்க முடியாது என்று எனது முடிவைத் தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடுகள்) என்னுடைய முடிவைச் சொல்லிவிட்டேன். (குறுக்கீடுகள்) நீங்களெல்லாம் ஏற்கெனவே அமைச்சர்களாக இருந்தவர்கள், பொறுப்பில் இருந்திருக்கிறீர்கள். உங்களுக்கு இதுகுறித்துத் தெரியும். (குறுக்கீடுகள்) சட்டப் பேரவை விதி 65–இன்படி, ஒத்திவைப்புத் தீர்மானம் எதுவுமே நீதிமன்றத்தில் இருப்பது குறித்து எடுக்கக்கூடாது என்று இருக்கிறது. அதேமாதிரி, விதி 92–இன்கீழ் நீதிமன்றத்தில் இருக்கக்கூடிய எந்தப் பிரச்சினையையும் எழுப்பக் கூடாது; பேசக் கூடாது என்று இருக்கிறது. (குறுக்கீடுகள்) நீங்கள் விதியை மீறி அதை எடுக்க வேண்டுமென்று வற்புறுத்துவது முறையல்ல. (குறுக்கீடுகள்)

(ஆ) வாணியம்பாடி, தோல் பதனிடும் தொழிற்சாலை கழிவுநீர்த் தொட்டியின் விஷ வாயுவால் 5 பேர் இறந்தது

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. ஞானசேகரன்.

திரு. சி. ஞானசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வாணியம்பாடியில் தோல் பதனிடும் தொழிற்சாலையினுடைய கழிவுநீர்த் தொட்டியைச் சுத்தப்படுத்துகிறபோது அங்கே விஷ வாயு தாக்கி 5 பேர் 3 நாட்களுக்கு முன்னாலே இறந்துவிட்டார்கள். அவர்கள் மாண்டது குறித்து ஏற்பட்டிருக்கக்கூடிய சாலை மறியல், அதனால் ஏற்பட்டிருக்கக்கூடிய பதற்ற நிலை குறித்து நான் இந்த அவையினுடைய கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு முதல்வரோ, துணை முதல்வரோ மற்ற சம்பந்தப்பட்ட அமைச்சரோ இல்லாததனால், இதுசம்பந்தமாக நாளைக்கு எடுத்துக்கொள்ளலாம். (குறுக்கீடுகள்)

(அ) கோவை, ஈரோடு மாவட்ட திராவிட பஞ்சாலைத் தொழிலாளர் சங்கக் கட்டடத்திற்குள் சென்ற ம.தி.மு.க.–வினர் கைது–தொடர்ச்சி

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. ஓ. பன்னீர்செல்வம், நீங்கள் mention பண்ணுங்கள். (குறுக்கீடுகள்) Mention பண்ணுங்கள்; அவ்வளவுதான். (குறுக்கீடுகள்) மாண்புமிகு எதிர்க் கட்சித் துணைத் தலைவர் அவர்கள்.

திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோவை பெரியார் மாவட்டத்தினுடைய திராவிட பஞ்சாலை முன்னேற்றச் சங்கத்தினுடைய நிருவாகம், மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய அரசியல் ஆலோசனைக் குழுச் செயலாளர், திருப்பூர் துரைசாமி அவர்களுடைய தலைமையில் முறைப்படி இயங்கி வந்திருந்தது. **

முற்பகல் 9–35

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உயர்நீதிமன்றத்தில் இல்லை. நான் order-ஐயே பார்த்துவிட்டேன். Please don't give false information. (குறுக்கீடுகள்) சொல்லுங்கள்.

திரு. ஓ. பன்னீர்செல்வம்: முடித்துக்கொள்கிறேன் நான். முடித்துக்கொள்கிறேன் நான்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அதாவது நான் சொல்கிறேன் கேளுங்கள். Case-இன் facts உள்ளே போகாமல் . . .

திரு. ஓ. பன்னீர்செல்வம்: போகவில்லை. போகவில்லை. **

மாண்புமிகு பேரவைத் தலைவர்: எதிர்க்கட்சி துணைத் தலைவர், நான் சொல்கிறேன், கேளுங்கள். ** அந்த வார்த்தைகள் அவைக்குறிப்பில் இருந்து நீக்கப்படுகின்றன. சொல்லுங்கள்.

திரு. ஓ. பன்னீர்செல்வம்: ** நான் முடித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: சொல்லுங்கள்.

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

2010 மே 5]

திரு. ஓ. பன்னீர்செல்வம்: ** நாங்கள் அந்த சங்கக் கட்டடத்தில் முறையாகச் செயல்பட வேண்டும். எங்களுக்கு உரிய பாதுகாப்பு தரவேண்டுமென்று அவர்கள் முறையீடு செய்தார்கள். மாவட்ட, மாநகரக் காவல் துறையும் ஒரு நாள் அவகாசம் கொடுங்கள்; உரிய நடவடிக்கைக்கு நாங்கள் உறுதுணையாக இருப்போம் என்று வாக்குறுதி அளித்தார்கள். இந்த நிலையில், மே 1 ஆம் தேதி திருப்பூர் துரைசாமியும், அவர்களுடைய கட்சியான மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழக மாவட்ட நிருவாகிகளும், அலுவலகத்தில் உட்கார்ந்து பேசிக்கொண்டிருக்கும்போது திருப்பூர் துரைசாமி அவர்களையும், அவரோடு சேர்ந்த 500 பேர்களையும் கைது செய்திருக்கிறார்கள். அதாவது, மாவட்டக் காவல் துறையிடம், “தீர்ப்பு வழங்கப்பட்டிருக்கிறது; எங்களுக்கு முறையாக நீங்கள் பாதுகாப்பு தரவேண்டும்” என்று போன அவர்களையே காவல் துறை கைது செய்திருக்கின்ற ஒரு சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. இது தொழிற்சங்கங்களையும், தொழிலாளர்களையும் அவர்களுடைய அடிப்படையையே சம்மட்டி கொண்டு அடிக்கின்ற செயலாகும் என்பதை நான் இங்கே சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். ஆகவே, காவல் துறை முறையான நடவடிக்கை மேற்கொள்வதற்கு . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நான் சொல்கிறேன் கேளுங்கள். திரு. O.P.S., நான் சொல்கிறேன், கேளுங்கள். காவல் துறை எடுத்த நடவடிக்கைகள் குறித்து கூறியது மாத்திரம்தான் அவைக்குறிப்பில் இருக்கும். நீங்கள் சொன்ன மற்றவை அவைக்குறிப்பில் ஏறாது; நீக்கப்படுகிறது. காவல் துறை நடவடிக்கையைப் பற்றிக் கூறினீர்கள் அல்லவா? அது மட்டும் அவைக்குறிப்பில் இருக்கும். அதற்கு முன்னாலே வழக்கு சம்பந்தமாக மற்றும் மற்ற விஷயங்கள் பற்றி நீங்கள் பேசியவை அவைக்குறிப்பில் இருக்காது; நீக்கப்படுகிறது; சொல்லுங்கள்.

திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காவல் துறையை தன் கையில் வைத்திருக்கின்ற இந்த அரசு, முறையாக காவல் துறையினருக்கு அறிவுரையையும், ஆலோசனையையும் வழங்கி, தீர்ப்பு யாருக்கு வழங்கப்பட்டிருக்கின்றதோ அவர்களுடைய தொழிற்சங்கமான மறுமலர்ச்சி திராவிட முன்னேற்ற கழகத்தின் திருப்பூர் துரைசாமி அவர்களுடைய தலைமையில் இருக்கின்றவரிடம் சங்கக் கட்டடத்தையும், நிருவாகத்தையும் ஒப்படைக்க ஆவன செய்ய வேண்டுமென்று இந்த சபையின் கவனத்தை ஈர்த்து அமர்கின்றேன்.

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: Right. மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள். (குறுக்கீடுகள்) ஒருவர் சொல்லிவிட்டார். உங்கள் சார்பாகத்தான் அவர் சொல்லியிருக்கிறார். (குறுக்கீடுகள்) உட்காருங்கள். அமைச்சர், நீங்கள் பேசுங்கள்.

முற்பகல் 9–40

* **மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வழக்கைப் பற்றி அதற்குள் நான் செல்ல விரும்பவில்லை. ஓர் உண்மை நிலையை மட்டும் சபையிலே உள்ளவர்களுக்கு விளங்க வைக்க விரும்புகின்றேன். ** . . . (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு அமைச்சர், அந்த issue-வை நாம் இப்போது எடுக்கவில்லை. அதாவது, காவல் துறையினுடைய அத்துமீறல் என்று அவர் சொல்கிறார். அது மாத்திரம்தான் அவைக்குறிப்பிலே இருக்கும். மற்றவை அனைத்தும் அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகின்றன. அவர் சொன்னதும் நீக்கப்படுகிறது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னதும் நீக்கப்படுகிறது. காவல் துறையின் அத்துமீறல் என்பது மாத்திரம் அவைக் குறிப்பில் இருக்கும். அடுத்த அலுவல் எடுத்துக்கொள்ளப்படுகிறது.

2. மானியக் கோரிக்கைகள், 2010–2011, விவாதமும் வாக்கெடுப்பும்–தொடர்ச்சி

(அ) கோரிக்கை எண் 6 – கால்நடை பராமரிப்பு (கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன் வளத் துறை)

(ஆ) கோரிக்கை எண் 7 – மீன் வளம் (கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன் வளத் துறை)

(இ) கோரிக்கை எண் 8 – பால் வளம் (கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன் வளத் துறை)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 2010–2011 ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கை மீது விவாதமும் வாக்கெடுப்பும். 4–5–2010

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.